எண்:113/ 2026 நாள்: 24.09.2026

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
எண்.3, தேர்வாணையச் சாலை , சென்னை – 600 003.
செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்.11/2025, நாள்.15.07.2025-ல் அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II (தொகுதி II) பணியில் அடங்கிய பதவிகளுக்கு 16.09.2026 அன்று கலந்தாய்வு நடைபெற்றது. கலந்தாய்வின் முடிவில் வனவர் (பதவிக் குறியீடு 3363) பதவியில் நிரப்பப்படாமல் உள்ள இரண்டு காலிபணியிடத்தினை நிரப்பும் பொருட்டு விண்ணப்பதாரர்களது ஒட்டுமொத்த தரவரிசை எண், விண்ணப்பத்தில் கோரியிருந்த கோரிக்கை, இட ஒதுக்கீட்டு விதி, காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் இரண்டாம் கட்ட கணினிவழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு (Onscreen Certificate Verification) தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் 24.09.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

கணினிவழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட தேர்வர்கள் தங்களது சான்றிதழ்களை 28.09.2026 முதல் 30.09.2026 வரை தேர்வாணைய இணையதளத்தின் ஒருமுறைப் பதிவு பிரிவின் (One Time Registration Platform) மூலம் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. சான்றிதழ்களை உரிய நேரத்திற்குள் பதிவேற்றம் செய்யாத தேர்வர்கள், தெரிவின் அடுத்த கட்ட நிலைக்கு பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

திரு. பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்